Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 17 ஜனவரி, 2023

**2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகளில் நெஸ்லே லங்கா வெற்றியீட்டியுள்ளது**

*2022 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் 3 சிறந்த நிறுவனங்கள் மத்தியில் இடம்பிடித்துள்ளதுடன், ஆறு விருதுகளை தனதாக்கியுள்ளது*

நெஸ்லே லங்கா நிறுவனம் அண்மையில் நடைபெற்ற சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகள் 2022 இல் மகத்தான வெற்றியீட்டியுள்ளது. சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருது 2022 க்கான மூன்றாவது இடம், மிகச் சிறந்த பத்து நிறுவனங்கள், துறைக்கான விருது - உற்பத்தி, இலாபம்-மக்கள்-பூமி க்கான விருது - சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் (பூமி), துறைசார் விருது - சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பு, மற்றும் துறைசார் விருது - நிதியியல் செயல்திறன் என மொத்தமாக ஆறு விருதுகளை தனதாக்கியுள்ளது. இலங்கையின் அதியுயர் நிறுவன கௌரவம் என பரவலாகக் கருதப்படும், இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகள், மக்கள், பூமி மற்றும் இலாபம் ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்தியவாறு செயல்படும் நிலைபேற்றியல் தொடர்பில் முன்மாதிரியான நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

''சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகளில் தொடர்ந்து அங்கீகாரம் பெறுவதில் நாங்கள் பணிவும், மகிழ்ச்சியும் அடைகிறோம். நெஸ்லே நிறுவனத்தில், எமது செயற்பாடுகள் அனைத்திலும் நிலைபேற்றியலே மையமாக உள்ளதுடன், இது போன்ற ஒரு மதிப்புமிக்க மேடையில் எமது நிலைபேற்றியல் பயணத்தை நிரூபித்து உத்வேகத்தை தூண்டுவது எமக்கு கிடைத்துள்ள ஒரு கௌரவமாகும். கடந்த இரண்டு வருடங்கள் பொதுவாக எம் அனைவருக்கும் மிகவும் சவாலானவை. எம்மைப் போன்ற நிறுவனங்கள் உட்பட அனைவரும் புதியவற்றைக் கண்டறிந்து, மீள்-வியூகம் வகுக்க இச்சவால் அனைவரையும் தூண்டியுள்ளது. இருந்தபோதிலும், முன்னெப்போதும் இல்லாத வகையிலான நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியிலும், மதிப்புச் சங்கிலிக்கு அப்பால், நமது பங்குதாரர்களுடன் இணைந்து மிகவும் நிலைபேற்றியலுடனான மற்றும் சவாலில் இருந்து மீண்டு எழுகின்ற இலங்கையை தோற்றுவிப்பதற்கான எங்கள் அயராத முயற்சிகளைத் தொடர முடிந்ததில் நான் பெருமைப்படுகிறேன். 'நல்லுணவு, நல்வாழ்வு' என்ற எங்களின் வாக்குறுதிக்கு இணங்க, 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் நன்மைக்கான வலுவான சக்தியாக இருக்கும் அதே வேளையில், எங்களின் இலட்சிய நிலைபேற்றியல் அர்ப்பணிப்புகளை அடைவதை நோக்கி நாம் தொடர்ந்து முன்னேறுவோம்!'' என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு ஜேசன் அவன்சென்யா அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

வணிகத்தின் அனைத்து செயற்பாட்டு அம்சங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலைபேற்றியலைக் கொண்ட ஒரு நிறுவனமாக, குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பூமிக்கு நலன் கிடைக்கச் செய்ய நெஸ்லே தன்னுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து பல்வேறு குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இலங்கைக்கான இந்த தொடர்ச்சியான, நேர்மறையான பங்களிப்புக்களை அங்கீகரிக்கும் வகையில், இம்முறை எட்டாவது ஆண்டாகவும் நெஸ்லே லங்கா நிறுவனம் நாட்டின் முதல் 10 சிறந்த நிறுவனங்கள் மத்தியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சமூக உறவுகள், பணியாளர்கள் உறவுகள், வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் பலவற்றுக்காக பல ஆண்டுகளாக பல்வேறு பிரிவுகளில் விருதுகளைப் பெற்றுள்ள நிறுவனம், முதல் 10 சிறந்த நிறுவனங்கள் விருதுக்கு புறம்பாக, சுற்றுச்சூழலின் நிலைபேற்றியலுக்கான அதன் அயராத முயற்சிகளுக்காக மூன்று விருதுகளை தனதாக்கியுள்ளதன் மூலம், 2021 ஆம் ஆண்டில் அதன் போற்றத்தக்க செயல்திறனுக்காக பாராட்டப்பட்டது.

ஆண்டுதோறும் நடத்தப்படும், சிறந்த நிறுவன நிலைபேற்றியல் விருதுகள் உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு சிறந்த பங்களிப்பாளர்களையும், நிறுவன நிலைபேற்றியலில் சிறந்த செயல்திறன் கொண்டவர்களையும் அங்கீகரிக்கிறது. இதற்கான நுழைவு விண்ணப்பங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வல்லுநர்கள், கல்விமான்கள் மற்றும் சிந்தனைச் சிற்பிகளைக் கொண்ட மிகவும் மரியாதைக்குரிய நடுவர் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

‘தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்’ என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் இசுரி அழககோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |


புகைப்படத்தில் இடம்பெற்றுள்ளவர்கள்: இடமிருந்து வலமாக: **திரு. பந்துல எகொடகே**, துணைத் தலைவர் - நிறுவன மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள், நெஸ்லே லங்கா; **திரு. பஞ்சாட்சரம் சத்தியேந்திரா**, துணைத் தலைவர் - வழங்கல் சங்கிலி, நெஸ்லே லங்கா; **ரதினி டி கொஸ்தா**, உதவி துணைத் தலைவர் - தொடர்பாடல்கள், நெஸ்லே லங்கா; **ஜகத் வெதகே**, சிரேஷ்ட உப தலைவர் - விற்பனை, நெஸ்லே லங்கா; **ஜேசன் அவன்செனியா**, முகாமைத்துவப் பணிப்பாளர், நெஸ்லே லங்கா; **திரு. ருவான் வெலிகல**, துணைத் தலைவர் - பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்கள், நெஸ்லே லங்கா; **திரு. பியார் இம்மானுவேல் மொறின்**, தொழிற்சாலை முகாமையாளர் - தொழில்நுட்பம், நெஸ்லே லங்கா; **திரு. தமித்த குலதுங்க**, சிரேஷ்ட முகாமையாளர் - நிறுவன பொது விவகாரங்கள், நெஸ்லே லங்கா; **இசுரி அழககோன்**, முகாமையாளர் - நிறுவன தொடர்பாடல்கள், நெஸ்லே லங்கா; **இனோகா சிறிமான்ன**, உதவித் தலைவர் - மனித வளங்கள், நெஸ்லே லங்கா.